**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.116/2022
Prosecution witness-05.

| | |
|---|---|
| பெயர் : பிரகலாதப் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2023.

19.06.2023

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள கையொப்பம் மட்டும் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 12.08.2021ம் தேதி 22.00 மணியளவில் நானும், செந்தூர்பாண்டியன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது இளஞ்செம்பூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.